முனைவர் .எஸ். நகூர் கனி

இணைப்பேராசிரியர்

முதுகலை தமிழாய்வுத்துறை

ஜமால் முகமது கல்லூரி

திருச்சிராப்பள்ளி-20

## பாட்டும் தொகையும்

### வகை தொகை – பாட்டும் தொகையும்

சங்க இலக்கியம்இ 'பாட்டும் தொகையும்' எனப்படும். பாட்டு என்பது பத்துப்பாட்டையும்இ தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். தனிப் பாடல்கள் பலவற்றின் தொகுப்பு எட்டுத்தொகையாகும். நெடும் பாடல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு எனப்படுகிறது.

### எட்டுத்தொகை நூல்கள்

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம், புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**

என்னும் பாடல் எட்டு நூல்களை அழகுறக் கூறுகிறது. நற்றிணைஇ குறுந்தொகைஇ ஐங்குறுநூறுஇ கலித்தொகைஇ அகநானூறு (அகப்பாடல்கள்)இ பரிபாடல் (அகம்இ புறம் இரண்டும்) புறநானூறுஇ பதிற்றுப்பத்து (புறப்பாடல்கள்).

பரிபாடலில் வையை பற்றியன அகப்பாடல்கள்இ செவ்வேள்இ திருமால் பற்றியன புறப்பாடல்கள். கலித்தொகையும் பரிபாடலும் முறையே கலிப்பாவாலும்இ பரிபாடலாலும் இயற்றப்பட்டதால் அப்பெயர்களுக்கு உரியனவாயின. பிற சங்கப் பாடல்கள் அனைத்தும் ஆசிரியப் பாவாலானவை.

### பததுப்பாட்டு நூல்கள்

1.திருமுருகாற்றுப்படைஇ 2.பொருநராற்றுப்படைஇ 3.சிறுபாணாற்றுப்படைஇ 4.பெரும்பாணாற்றுப்படைஇ 5.கூத்தராற்றுப்படை என்னும் ஐந்தும் ஆற்றுப்படை நூல்கள் எனப்படும். கூத்தராற்றுப்படைக்கு மற்றொரு பெயர் மலைபடுகடாம் ஆகும். 6.மதுரைக்காஞ்சிஇ 7.குறிஞ்சிப்பாட்டுஇ 8.பட்டினப்பாலைஇ 9.நெடுநல்வாடைஇ 10.முல்லைப்பாட்டு எனப் பத்தும் பத்துப்பாட்டு என்னும் தொகுப்பினுள் அடங்கியுள்ளன. இப்பத்தையும் ஒரு பழைய வெண்பா பின்வருமாறு கூறுகிறது.

"முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வள மதுரைக்காஞ்சி — முருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

இவற்றுள் அடிஅளவால் மிகப்பெரியது 782 அடியுள்ள மதுரைக் காஞ்சியாகும். மிகச் சிறயது 103 அடியுள்ள முல்லைப்பாட்டாகும். பட்டினப்பாலையில் வஞ்சி அடிகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளமையால் அதனை "வஞ்சி நெடும் பாட்டு" எனக் கூறுவர்.

## எட்டுத்தொகை நூல்கள்

| வ. எண் | நூல் | வகை | அடி எல்லை | பாடல்கள் | பாடிய புலவர்கள் | நுவல் பொருள் சிறப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | நற்றிணை | அகம் | 9-12 | 400 | 275 | காதல் நெறியும் இல்லற இன்பமும் பழந்தமிழரின் அன்பு வாழ்க்கை |
| 2. | குறுந்தொகை | அகம் | 4-8 | 400 | 205 | காதல் நெறியும் இல்லற இன்பமும் பழந்தமிழரின் அன்பு வாழ்க்கை |
| 3. | ஐங்குறுநூறு | அகம் | 3-6 | 500 | 5 | தலைவன் தலைவி — அன்பின் நெகிழ்ச்சி |
| 4. | அகநானூறு (அ) நெடுந்தொகை | அகம் | 13-31 | 400 | 145 | வரலாற்றுக் குறிப்புகள் மிகுதி |
| 5. | கலித்தொகை | அகம் | - | 149 | 5 | பண்பை அன்பை அறிவை சிறப்புறக் கூறல் |
| 6. | புறநானூறு | புறம் | 4-40 | 400 | 160 | பழந்தமிழரின் வீரம்இ நாகரிகம் முதலியவற்றைக் கூறும் கருத்துப் பெட்டகம். |
| 7. | பதிற்றுப்பத்து | புறம் | - | 80 | 10 | சேரமன்னர்களைப் பற்றிய வரலாறு கூறுவது |
| 8. | பரிபாடல் | அகமும் புறமும் | 25-400 | 22 | 13 | திருமால்இ முருகன்இ வையைஇ கொற்றவை ஆகியனவற்றைப் புகழ்ந்து பாடுதல் |

## எட்டுத்தொகை – தொகுத்தவர் & தொகுப்பித்தவர்

| வ. எண் | பெயர் | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | சவாழ்த்தப்பெற்றவர் ∴ வாழத்தியவர் |
|---|---|---|---|---|
| 1. | நற்றிணை | ---- | பன்னாடு தந்த மாறன் வழுதி | திருமமால் ∴ பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| 2. | குறுந்தொகை | உப்பூரிக்குடி கிழார் | பூரிக்கோ | முருகன் ∴ பாரதம் பாடிய பெருந்தேவன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | ஐங்குறுநூறு | புறத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் | சிவன் ∴ பாரதம் பாடிய பெருந்தேவன் |
| 4. | பதிற்றுப்பத்து | தெரியவில்லை | தெரியவில்லை | சிவன் |
| 5. | பரிபாடல் | -- | --- | -- |
| 6. | கலித்தொகை | நல்லந்துவனார் | --- | சிவன் ∴ நல்லந்துவனார் |
| 7. | அகநானூறு | மதுரை உப்பூரிக்குடி கிழார் மகனார் உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி | சிவன் ∴ பாரதம் பாடிய பெருந்தேவன் |
| 8. | புறநானூறு | -- | --- | சிவன் ∴ பாரதம் பாடிய பெருந்தேவன் |

## எட்டுத்தொகை – நூல் அளவும் கிடைத்தவையும்

| வ. எண் | பொருள் | பாடல் | பாக்கள் | கிடைத்தவை | அடிஅளவு | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அகம் (5) | 1. ஐங்குறுநூறு<br>2. குறுந்தொகை<br>3. நற்றிணை<br>4. அகநானூறு<br>5. கலித்தொகை | 500<br>400<br>400<br>400<br>150 | 498<br>400<br>400<br>400<br>150 | 3-6<br>4-8<br>9-12<br>13-31 | 5<br>205<br>175<br>145<br>5 |
| 2. | புறம் (2) | 1. புறநானூறு<br>2. புதிற்றுப்பத்து | 400<br>80 | 398<br>80 | 4-40<br>4-40 | 160<br>10 |
| 3. | அகமும் புறமும் (1) | 1. பரிபாடல் | 22 | 22 | 25-40 | 13 |

## பத்துப்பாட்டு நூல்கள்

| வ. எண் | நூல் | வகை | அடி ∴ அளவு | ஆசிரியர் | பாட்டுடைத் தலைவன் | நூல்பொருள் ∴ சிறப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருமுறுகாற்றுப்படை (அ) புலவராற்றுப்படை | ஆற்றுப்படை | 317 | நக்கீரர் | முருகன் | அறுபடை வீடு பற்றிய தகவல்கள் முருக வழிபாட்டு முறைகள் |
| 2. | பொருநராற்றுப்படை | ஆற்றுப்படை | 248 | முடத்தாமக் கண்ணியர் | கரிகாலன் | கரிகாலனின் இயல்பும் சோழநாட்டின் வளமும் |
| 3. | சிறுபாணாற்றுப்படை | ஆற்றுப்படை | 269 | நத்தத்தனார் | நல்லியக்கோடன் | நல்லியக்கோடனின் பண்பும் வஞ்சிஇ கொற்கைஇ மதுரைஇ உறந்தை நகரங்களின் சிறப்பும் |
| 4. | பெரும்பாணாற்றுப்படை | ஆற்றுப்படை | 500 | உருத்திரங் | இளந்திரையன் | ஐந்திணை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கண்ணனார் | | வருணனையும் இளந்திரையனின் ஆட்சிச் சிறப்பும் |
| **5.** | மலைபடுகடாம் (எ) கூத்தராற்றுப்படை | ஆற்றுப்படை | 583 | பெருங் கௌசிகனார் | நன்னன் சேய் நன்னன் | இசையின் அருமையும் உவமைச் சிறப்பும் |
| **6.** | குறிஞ்சிப்பாட்டு | அகம் | 261 | கபிலர் | ஆரிய அரசன் பிரகத்தன் | நன்னனின் நாட்டு வளமும் ஆரிய அரசனுக்குத் தமிழன் பெருமை உணர்த்தல் 99 பூக்களின் பெயர்கள் |
| **7.** | முல்லைப்பாட்டு | அகம் | 103 | நப்பூதனார் | நெடுஞ்செழியன் | சங்ககால மக்களின் விழுமிய வாழ்க்கை நிலை |
| **8.** | பட்டினப்பாலை | அகம் | 301 | உருத்திரங் கண்ணனார் | கரிகாலன் | காவிரிப்பூம்பட்டினத்தின் வளமும் திருமாவளவனின் சிறப்பியல்பும் |
| **9.** | நெடுநல்வாடை (புறம்) | புறம் | 188 | நக்கீரர் | பாண்டியன் | கூதிர்கால நிலைப் பாடும் தலைவன் தலைவி மனப்பாங்கும் |
| **10.** | மதுரைக்காஞ்சி | புறம் | 782 | மாங்குடி மருதனார் | நெடுஞ்செழியன் | பாண்டிய மரபும் மதுரை நகரச் சிறப்பும் |

## <u>எட்டுத்தொகை நூல்கள்</u>

**1. நற்றிணை**

எட்டுத்தொகை நூல்களுள் முதலில் குறிப்பிடப்படும் பெருமையினைப் பெற்றது நற்றிணை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன்வழுதி. இது 9 முதல் 12 அடிகளைக் கொண்டது. இது 400 பாடல்களைக் கொண்டது. இப்பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 275. நற்றிணையில் வாழ்த்தப்பட்டிருக்கும் கடவுள் திருமால்இ வாழ்த்திய புலவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

தேய்புரிப் பழங்கயிற்றினார்இ விழிக்கட் பேதையார்இ தன் மகனார் தும்பி சேர் கீரனார் போன்ற பாடலாசிரியர்கள் சிலரின் பெயர்கள் அவர்கள் எழுதிய பாடல் வரிகளாலே வழங்கப்படுகின்றன.

**'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'**

**'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே'**

**'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**

***முல்லை சான்ற கற்பின்…***
***மெல்லியற் குறுமகள்'***

***'அம்ம வாழி தோழி காதலர்***
***நிலம் புடை பெயர் வதாயினும் கூறிய***
***சொல் புடைபெயர்தலோ இலரே'***

***'நீரின்றமையா உலகம் போல'***

## 2. குறுந்தொகை

குறுகிய அடிகளால் ஆன பாடல்களால் இந்நூல் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. எட்டுத்தொகை நூல்களுள் "நல்ல குறுந்தொகை" என்று அழைக்கப்படுவதாலேயே இதன் சிறப்புப் புலனாகிறது. இதனைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிகிழார்இ தொகுப்பித்தவர் பூரிக்கோ. குறுந்தொகைப் பாடல்கள் 4 முதல் 8 அடிகளைக் கொண்டிக்கிறது. இதில் 400 பாடல்கள் இருக்கின்றன. இதனைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 205 குறுந்தொகையில் வாழ்த்தப்பட்ட கடவுள் முருகன்இ வாழ்த்தியர் பாரதம் பாடிய பெருந்தேவரனார்.

உரையாசிரியர்களில் பலர் தாம் எழுதிய இலக்கணம்இ செய்யுள் ஆகிய உரை நூல்களுள் மேற்கேளாக மிகுதியான பாடல்களைக் குறுந்தொகையிலிருந்தே எடுத்தாண்டுள்ளனர். குறுந்தொகைப் பாடல்கள். குட்டுவன்இ திண்டேர்ப் பொறையன்இ பசும்பூண் பாண்டியன்இ நன்னன்இ பாரிஇ வல்வில்இ ஓரிஇ நள்ளி முதலான பெருநில வேந்தர்இ குறுநில மன்னர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் இந்நூலில் உள்ளன. அணிலோடு முன்றிலார்இ காக்கைப் பாடினியார்இ மீனெறி தூண்டிலார் போன்ற பாடலாசிரியர்கள் சிலரின் பெயர்கள் அவர்கள் எழுதிய பாடல் வரிகளாலே வழங்கப்படுகின்றன.

**குறுந்தொகையிலிருந்து சில பாடல்கள்**

நக்கீரன் சிவ பெருமானை நோக்கி 'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று வாதிடும் அளவிற்கு வாதத்தை ஏற்படுத்திஇ

***'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி***
***காமம் செப்பாது கண்டது மொழிமோ'***

என்னும் பாடல் இதில் இடம் பெற்றுள்ளது.

***'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரள வின்றே சாரல்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'***

***'யாயும் யாயும் யாராகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்***
***…………………………………….***
***செம்புலப் பெயல்நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே'***

***'இம்மை மாறி மறுமை ஆகினும்***
***நீ ஆகியர் எம் கணவனை***
***யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே'***

***'வினையே ஆடவர்க்கு உயிரே'***

***'பசியற்றே பசலை காதலர்***
***தொடுவுழி தொடுவுழி நீங்கி***
***விடுவுழி விடுவுழிப் பரத்தலானே'***

**3. *ஐங்குறுநூறு***

*குறிஞ்சிஇ முல்லைஇ மருதம்இ நெய்தல்இ பாலை என ஐந்து திணைக்கும் 100 பாடல்கள் மூலம் 600 பாடல்களைக் கொண்டது ஐங்குறுநூறு. இதனைத் தொகுத்தவர் புறத்துறை முற்றிய கூடலூர் கிழார்இ தொகுப்பித்தவர் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. ஐங்குறுநூறு 3 முதல் 6 அடிகளைக் கொண்டது. இதிலுள்ளு பாடல்களின் எண்ணிக்கை 500. இப்பாடல்கள் 5 புலவர்களால் பாடப்பட்டுள்ளது. இதில் வாழ்த்தப்பெற்ற கடவுள் சிவன்இ வாழ்த்தியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.*

***"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்***
***கருதும் குறிஞ்சி கபிலர் – கருதிய***
***பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே***
***நூலையோ தைங்குறு நூறு"***

*என்ற வெண்பா இத்திணைப் பாடல்களை இன்னின்ன புலவர்கள் பாடினார்கள் என்பதை உணர்த்துகிறது.*

***'விளைஅ வயலே வருக இரவலர்***
***பால்பல் ஊறுக பகபடுபல சிறக்க'* (513:2)**

***'பகைவர் புல்லார் பார்ப்பார் ஓதுக'* (514:2)**

***'பசியில் லாகும் பிணிசேண்நீங்குக'* (515:2)**

***'வேந்துபணி தணிக யாண்டுபலந்துக'*(516:2)**

***'அறம் நனி சிறக்க அல்லது கெடுக'*(517:2)**

**4. *அகநானூறு***

*நற்றிணைப் பாடல்களிலும் நெடிய பாடல்களைக் கொண்ட தொகை நூல் அகநானூறு. இதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடிகிழார் – மகனார் உருத்திரசன்மனார் தொகுப்பித்தர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. அகநானூறு 13 முதல் 31 அடிகளிலமைந்த பாடல்களைக் கொண்டது. இதில் உள்ள பாடல்கள் 400இ பாடிய புலவர்களின் எண்ணிக்கை 145. இதில் வாழ்த்தப்பட்ட கடவுள் சிவன். வாழ்த்தியர் பாரதம் பாடிய பெருந்தேவனார். அகநானூற்றில் ஒற்றைப்படை எண்களைக் கொண்ட 200 பாடல்கள் பாலைத்திணைப் பாடல்கள் என்றும்இ 2இ 8இ 12இ 18…. என்ற எண்களைக் கொண்ட பாடல்கள்*

குறிஞ்சித்திணைப் பாடல்கள் என்றும்இ 4இ 14இ 24இ 34… என்ற எண்களைக் கொண்ட பாடல்கள் முல்லைத்திணைப் பாடல்கள் என்றும்இ 6இ 16இ 26… என்ற எண்களைக் கொண்ட பாடல்கள் மருத்திணைப் பாடல்கள் என்றும்இ 10இ 20இ 30 என்ற எண் கொண்ட பாடல்கள் நெய்தல் திணைப் பாடல்களாகவும் அமைந்துள்ளன.

இதில் முதல் 120 பாடல்கள் களிற்றுயானை நிரை எனவும்இ 121 முதல் 300 வரையுள்ள பாடல்கள் மணிமிடைப் பவளம் எனவும்இ 301 முதல் 400 வரையுள்ள பாடல்கள் நித்திலக்கோவை எனவும் அழைக்கப்படுகின்றன. குழந்தைப் பேற்றின் சிறப்பு இந்நூலில் பரவலாகப் பேசப்படுகிறது. மௌரியரின் படையெடுப்புஇ மாமூலனாரின் பாடலால் அறியப்படுகிறது.

## 5. கலித்தொகை

கலிப்பாவால் ஆன நூற்றைம்பது பாக்களைக் கொண்ட நூல் கலித்தொகை ஆகும். இதனைத் தொகுத்தவர் நல்லந்துவனார்இ தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை. இது 150 பாடல்களைக் கொண்டது. இப்பாடல்கள் 5 புலவர்களால் பாடப்பட்பட்டுள்ளன. கலித்தொகையில் வாழ்த்தப்பட்ட கடவுள் சிவன். வாழ்த்தியவர் பாரதம் பாடிய நல்லந்துவனார்.

இப்பாடல்கள் இசைத்தன்மையுடன் கூடியனஇ ஆடலுடன் கூடியனஇ ஓரங்க நாடகம் போன்றவை. இவற்றை இசைப்பாட்டு என உரையாசிரியர்கள் கூறுவர். நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். கலித்தொகையில் குறிஞ்சிக்கலியை கபிலரும்இ முல்லைக்கலியை நல்லுருத்திரனும்இ மருதக்கலியை மருதநில நாகனாரும்இ நெய்தற் கலியை நல்லந்துவனாரும்இ பாலைக்கலியை பெருங்கடுங்கோவவும் பாடியுள்ளனர்.

இவற்றில் முல்லைகலி பாடல்கள் எறுதழுவுதலை எடுத்துரைக்கின்றன. கலித்தொகைப் பாடல்கள் பாண்டிய மன்னன் ஒருவனைப் பற்றியே பேசுகின்றன. பாண்டியர் நகரமான கூடல்இ பாண்டியர் ஆறான வைகை பாண்டியர் மலையான பொதிகை ஆகியனவே பேசப்படுகின்றன.

கலித்தொகையிலிருந்து சில பாடல்கள்

**‘பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்**
**அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை’**

**‘உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனும்**
**தாங்கொண்டது கொடுக்குங்கால்**
**முகனும் வேறாதல்**
**பண்டுமிவ் வுலகத்து இயற்கை’**

என்னும் பாலைக்கலி பாடல் கடன் வாங்கும் போதும்இ கொடுக்கும் போதும் மக்கள் மனம் எவ்விதம் செயல்படும் என்பதை எடுத்தியம்புகிறது.

## 6. புறநானூறு

எட்டுத்தொகை நூல்களில் தமிழர் மிகவும் ஏற்றிப் போற்றும் தனிச் சிறப்புப் பெற்றது புறநானூறு. இதனைத் தொகுத்தவர் மற்றும் தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.

புறநானூற்றுப் பாடல்கள் 4 முதல் 40 அடிகளைக் கொண்டவை. இதிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 400. இதனைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 160. புறநானூற்றில் வாழ்த்தப்பட்ட கடவுள் சிவன். வாழ்த்தியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

இப்பாடல்கள் அகவற்பாவால் பாடப்பட்டுள்ளன. கடையேழு வள்ளல்கள்இ புலவர்கள்இ முடியுடை வேந்தர்இ சிற்றரசர்கள்இ வேளிர்கள்இ புலவர்இ வீரர்இ மக்கள் முதலியோர் சிறப்பை இந்நூல் உணர்த்துகிறது. 18 சேர மன்னர்களையும்இ 13 சோழமன்னர்களையும்இ 12 பாண்டிய மன்னர்களையும் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. தமிழரின் சிறந்த சமுதாய வாழ்வுஇ அரசியல் எழுச்சிஇ விருந்தோம்பல்இ உயர்ந்த ஒழுக்கம்இ உறுதியான கொள்கைஇ தன்னலமற்ற ஈகைஇ வீர வாழ்வுஇ கொடைஇ அறம் ஆகியவற்றைப் புறநானூறு எடுத்துரைக்கிறது. மங்கையர் மங்கல அணி அணிதல்இ நடுகல் நடுதல்இ கைம்மை நோன்புஇ உண்டி சுருக்குதல்இ இறந்தவரைத் தாழியில் வைத்துப் புதைத்தல்இ உடன்கட்டை ஏறுதல் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் புறநானூறு குறிப்பிடுகிறது. நாம் மிகவும் அறிந்த பாரி கபிலர் நட்புஇ அதியன் – ஔவை நட்புஇ கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பு ஆகியன இதில் சொல்லப்பட்டுள்ளன. குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாகப் புறநானூறு திகழ்வதால் இதனை 'நந்தா விளக்கம்' என்றும் கூறுவர்.

புறநானூற்றிலிருந்து சில பாடல்கள்

**'நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**<br>**கடுமாப் பாக்கும் எல்லா ஒருவற்கும்**<br>**உண்பவை நாழி உடுப்பவை இரண்டே'**

**'செல்வத்துப் பயனே ஈதல்**<br>**துய்ப்பே எனினே தப்புந பலவே'**

**'நல்லது செய்தல் ஆற்றீராயினும்**<br>**அல்லது செய்தல் ஓம்புமின்'**

**'எவ்வழி நல்லவர் ஆடவர்**<br>**அவ்வழி நல்லை வாழிய நிலனே'**

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**

**'ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்**<br>**ஈயேன் எனல் அதனினும் இழிந்தன்று'**

## 7. பதிற்றுப்பத்து

எட்டுத்தொகையில் புறப்பொருள் கூறும் மற்றொரு நூல் பதிற்றுப்பத்து. சேர அரசர் பதின்மரைப் பற்றிப் புலவர்கள் பதின்மர் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியான நூறு பாடல்களே பதிற்றுப்பத்து ஆகும். இது அக்கால சேரர் வரலாற்றை அறியப் பெருந்துணை புரிகிறது. சேர அரசினர் பரம்பரையின் கால வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொகுத்தவர் மற்றும் தொகுப்பித்தவரின் பெயர் தெரியவில்லை. பதிற்றுப்பத்து 4 முதல் 40 அடிகளிலான பாடல்களைக் கொண்டது. இதிலுள்ள பாடல்கள் 80. இதனைப்

பாடிய புலவர்கள் 10 பேர். பதிற்றுப்பத்தில் வாழ்த்தப்பட்ட கடவுள் சிவன். வாழத்தியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். தொல்காப்பியர் தொடாத அந்தாதித் தொடை இதில் நான்காம் பத்தில் காணப்படுகிறது.

இதில் முதல் பத்தும் (உதியனைப் பற்றியது) கடைசிப்பத்து (யானைக்கண் மாந்தரஞ்சேரல் பற்றியது) கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தின் 2-ஆம் பத்து முதல் 6-ஆம் பத்து வரை பாடப்பட்டவர்கள் உதியஞ்சேரல் என்பவரின் குடிவழி வந்தவர்கள். 7-ஆம் பத்து முதல் 9-ஆம் பத்து வரை பாடப்பட்டவர்கள். இரும்பொறை என்ற குடிவழி வந்தவர்கள். இந்நூற்கண் வரும் பாட்டுக்கள் பொருள் நிறைந்து செறிவு மிகுந்து ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டிருத்தலின் இதனை ‘இரும்புக் கடலை’ எனவும் இயம்புவர்.

**8. *பரிபாடல்***

எட்டுத்தொகையுள் அகப்பொருள்இ புறப்பொருள் என்னும் இரு பொருளையும் கூறும் ஒரே நூல் பரிபாடல்தான். அகம்இ புறம் கலந்தமையால் இந்நூல் கலவை நூல் என்றும் அழைக்கப்படுகிறது. இதனைத் தொகுத்தவர்இ தொகுபித்தவர் ஆகியோர் யாரெனத் தெரியவில்லை. பரிபாடல் 25 முதல் 40 அடிகளைக் கொண்ட பாடல்களால் அமைந்தது. இதிலிருக்கும் மொத்தப் பாடல்கள் 70இ ஆனால் நமக்குக் கிடைத்தவை 22 பாடல்கள் மட்டுமே. இதனைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 13. பரி பாடலில் வாழ்த்தப்பட்ட கடவுள் சிவன். வாழ்த்தியவரின் பெயர் தெரியவில்லை.

மதுரையைச் சுற்றியுள்ள சமய சமூகப் பழக்க வழக்கங்களையே மையமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. வையை பற்றிய பாடல்களை அகமென்றும்இ ஏனை பாடல்களை புறமென்றும் கூறுவர். இது மதுரை நகர அமைப்பு வையையின் தோற்றம்இ திருப்பரங்குன்றம்இ திருமாலிருஞ்சோலை ஆகியவற்றைப் பற்றி அழகாக எடுத்துரைக்கிறது. மதுரையைச் சிறப்பிக்கும் முறையில் ‘மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவோடு புரையும் சீர் ஊர்’ என்று கூறுகிறது.

## ***<u>பத்துப்பாட்டு நூல்கள்</u>***

**1. *<u>திருமுருகாற்றுப்படை</u>***

பத்துப்பாட்டுத் தொகுதியில்இ அதன் கடவுள் வாழ்த்துப் போல் முதல் நூலாக விளங்குவது திருமுருகு ஆற்றுப்படைஇ இதனைப் பாடிய புலவர் நக்கீரர்இ பாட்டுடைத் தலைவன் முருகன். இது 317 அடிகள் பெற்றது. ஆசிரியப்பாவினால் ஆகியது. இதன் சிறப்பு என்னவென்றால் இது மட்டும் ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரால் அமையாமல் பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்துள்ளது.

இதனுள் திருப்பரங்குன்றம்இ திருச்சீரலைவாய்இ திருவாவினன்குடிஇ திருவேரகம்இ குன்றுதோறாடல்இ பழமுதிர்ச்சோலை என்ற முருகனின் ஆறுபடை வீடுகளும்இ முருகனின் செயல்களும்இ பெருமைகளும் கூறப்படுகின்றன. இதற்கு புலவராற்றுப்படைஇ முருகு என்ற வேறு பெயர்கள் உள்ளன.

## 2. பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படையினைப் பாடிய புலவர் முடத்தாமக் கண்ணியார்இ இதன் பாட்டுடைத் தலைவன் கரிகாலன். இது 248 அடிகளைக் கொண்டது. கரிகாற் பெருவளத்தானிடம் பரிசில் பெற்ற பொருநன் ஒருவன்இ பரிசில் பெறக் கருதும் புவலவன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் பாடல் இது. இதில் கரிகாலனின் இளமைஇ தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தியமைஇ வெண்ணிப் போர் வெற்றிஇ கரிகாலன் நரை முடித்து முரை செய்த விதம்இ நாட்டுச் சிறப்பு ஆகியன சொல்லப்பட்டுள்ளன. அரசன் தன்னை நாடி வந்து பரிசில் பெறுவோர்க்கு பரிசில் கொடுத்து அனுப்பும் போது அவர்களின் பின் ஏழடி நடந்து சென்று அனுப்பும் சிறப்பும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

## 3. சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படையினைப் பாடிய புலவர் நத்ததனார்இ பாட்டுடைத் தலைவன் நல்லியக்கோடன். இது 269 அடிகளைப் பெற்றது. ஒய்மா நாட்டு நல்லியக் கோடனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் இன்னொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது இந்த நூல். இப்பாடலில் கூறப்படும் பாணன் சிறிய யாழினை உடையவனாதலால் இப்பாடல் சிறுபாணாற்றுப்படை என்றழைக்கப்படுகிறது. இதில் நல்லியக் கோடனின் பண்புகள்இ வீரச் செயல்கள்இ வள்ளன்மைஇ விருந்தோம்பல் போன்றவை அழகுற சொல்லப்பட்டுள்ளன.

பழம்பெறும் நகரங்களான வஞ்சிஇ கொற்கைஇ மதுரைஇ உறந்தை ஆகிய நகரங்களின் சிறப்பும் இதில் கூறப்பட்டுள்ளது. கடையெழு வள்ளல்களின் கொடைத்திறனைப் பற்றியும் சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது. மூவேந்தரைப் பற்றி ஒருசேரக் குறிப்பிடும் ஒரே நெடும்பாடல் இதுவேயாகும்.

## 4. பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படையினைப் பாடிய புலவர் உருத்திரங் கண்ணனார்இ பர்டுடைத் தலைவன் இளந்தரையன். இது 500 அடிகளைக் கொண்டது. இளந்திரையனிடம் பரிசு பெற்ற பெரும்பாணன் ஒருவன் இன்னொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பெரும்பாணன் கையில் அமையும் யாழ் பேரியாழ். அதனால் இது பெரும்பாணாற்றுப்படை என்று வழங்கப்படுகிறது.

இப்பாடல் தொண்டை நாட்டின் சிறப்புஇ ஐந்திணைகளைப் பற்றிய வருணனைஇ அத்திணைகளில் வாழும் மக்களின் இயல்புகள்இ விருந்தோம்பும் முறைகள் ஆகியவை அழகாகக் கூறுப்பட்டுள்ளன. கணலி – சூரியன்இ முடலையாக்கை – முறுக்கேறிய உடம்புஇ உமணர் – உப்பு வணிகர்இ ஞெகிழி – தீக்கொள்ளிஇ வல்சி – உணவுஇ யாணர் – புது வருவாய் போன்ற பல அரிய சொற்கள் இதில் காணப்படுகின்றன.

## 5. மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை

இதனைப் பாடிய புலவர் பெருங்கௌசிகனார்இ இதனுடைய பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய்இ இப்பாடலின் அளவு 583 அடிகள். நன்னனிடம் பரிசில் பெற்ற கூத்தன் இன்னொரு கூத்தனை ஆற்றுப்படுத்தும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது. இதற்கு மற்றொரு பெயர் மலைபடுகடாம் (மலையின் ஓசையை கடாம் என சிறப்பித்தலால் இப்பெயர் பெற்றது). இதில் நன்னனின் நவிர மலைஇ அதன் இயற்கை எழில்இ மான்கள்இ கடாக்கள்இ குரங்கள்இ யானைக்குட்டிகள்இ அருவிகள்இ ஆறுகள்இ சோலைகள் முதலியன

அழகுறக் கூறப்பட்டுள்ளன. எண்ணற்ற இசைக் கருவிகிளன் பெயரும்இ யாழின் வர்ணனையும் இடம் பெற்றுள்ளன.

**6. குறிஞ்சிப்பாட்டு**

குறிஞ்சிப்பாட்டினைப் பாடிய புலவர் கபிலர்இ இதன் பாட்டுடைத் தலைவன் ஆரிய அரசன் பிருகத்தன். இப்பாட்டின் அளவு 261 அடிகள். பத்துப்பாட்டில் தலைசிறந்த பாடலாகத் திகழ்வது குறிஞ்சிப்பாடல் ஆகும். இது ஆசிரியப்பாவால் ஆனது. ஆரிய அரசன் யாழ்ப்பிரகத்தனை தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய பாடலே குறிஞ்சிப்பாட்டாகும்.

'அறத்தொடு நிற்றல்' என்ற தோழியின் பெரும்கடமையை இதில் அழகாகக் குறிப்பிடுகிறார் கபிலர். அறத்தோடு நிற்றல் என்பது தலைவன் தலைவியின் களவுக் கூறுகளை செவிலித்தாய்க்கு எடுத்துக்கூறி கற்பு மணம் கருதி நிற்றலாம். குறிஞ்சிப் பாட்டை சிறந்த நாடகம் எனலாம். பாடலில் தலைவியும் தோழியும் திணைப்புணம் காக்கச் செல்வதுஇ அருவியில் நீராடுவதுஇ 99 வகை மலர்களைத் தொடுப்பதுஇ யானை இவர்களை நோக்கி வருவதுஇ தலைவன் தலைவி உள்ளத்தால் புணர்தல்இ மனை நோக்கிச் செல்லுதல்இ தலைவன் ஆற்றின் நீரைக் குடித்து நல்மணம் புரிவேன் என சூளுரைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் குறிஞ்சிப் பாட்டில் இடம் பெறுகின்றன.

**7. முல்லைப்பாட்டு**

முல்லைப் பாட்டினைப் பாடிய புலவர் நப்பூதனார்இ பாட்டுடைத் தலைவன் பாண்டிய நெடுஞ்செழியன். இது 103 அடிகளால் ஆகியது. போர் அல்லது பொருளீட்டும் கடமை உணர்வால் ஆடவர் மகளிரை விட்டுப் பிரிந்து செல்லுதல் இயல்பு. இல்லில் தனித்திருக்கும் பெண்டிர் தமது கணவரை நினைத்து துயர் உறுவது இப்பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

முல்லைப் பாட்டில் காணும் காட்சிகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று காதலியின் பிரிவுத்துன்பம்இ இரண்டு பகைவர் மேற்சென்ற மன்னின் பாசறை அமைப்பு. வேந்தனின் பாசறை அமைப்பில் மிலேச்சர்கள் மெய்க்காப்பளார்களாக இருந்தனர். யவனப் பெண்கள் மாலை வந்ததும் நெய் விளக்கேற்றினர். நாழிகைக் கணக்கர் நாழிகை வட்டிலால் நேரம் குறித்து மன்னனுக்கு உணர்த்தினர். மன்னன் படுக்கையில் இருந்தவாறே போர்த்திட்டங்களை யோசித்துக் கொண்டிருந்தான்.

கார்காலம் வந்து முல்லைப் பூக்கள் பூத்தனஇ இன்னும் தலைவனைக் காணாமையால் தலைவி அழ ஆரம்பித்தாள். முது பெண்டிர் நன்னிமித்தம் கேட்டலாகிய 'விரிச்சி' கேட்க முற்பட்டனர். இவையெல்லாம் மிக அழகாக முல்லைப்பாட்டில் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**8. பட்டினப்பாலை**

பட்டினப்பாலையினைப் பாடிய புலவர் உருத்திங் கண்ணனார். பாட்டுடைத் தலைவன் கரிகாலன். இது 301 அடிகளைக் கொண்டது. இப்பாடலில் பூம்புகார் நகரையும்இ சோழ நாட்டையும்இ காவிரி ஆற்றினையும்இ வேந்தன் கரிகால் பெருவளத்தானையும் ஆசிரியர் அழகாகக் காட்டியுள்ளார்.

இளம்புலவன் உருத்திரங்கண்ணன் அழகான பட்டினப் பாலையை முடித்த பிறகு அதை கரிகால் மன்னனிடம் எடுத்துச் செல்ல விரும்பினான். அன்பு மனைவியின் நினைவுகள் அவனைப் போகவிடவில்லை. இறுதியில் மனைவியின் உருவத்திற்கு முன் பட்டினம் வெறும் பாலையாக அவனுக்குத் தோன்றியது. இப்படிப்பட்ட புலவனின் பெருமை கேட்ட கரிகாலன்

அவனுக்கு பதினாறு நூறாயிரம் பொன் பரிசாக அளித்ததோடுஇ கடியலூரில் அப்புலவனுக்காக ஆயிரங்கால் மண்டபன் ஒன்றையும் கட்டினான்.

உவாமதி நாளில் மீன் வேட்டைக்கு செல்லாத வழக்கம். மருவூர்ப்பாக்கம்இ பட்டினப்பாக்கம் ஆகிய பகுதிகளில் நடந்த அல்லங்காடிஇ நாளங்காடி ஆகியவற்றின் சிறப்பு ஆகியவையும் இதில் இடம் பெற்றுள்ளன.

### 9. நெடுநல்வாடை

நெடுநல் வாடையினைப் பாடிய புலவர் நக்கீரர்இ பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன். இது 188 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் பாடப்பெற்ற பாடலாகும். தலையாலங்கான வெற்றி பெற்ற தகையவன் நெடுஞ்செழியன். ஆனைக்கட் சேய் மாந்தலிரும் பொறையை சிறையில் அடைத்தவன்.

மறக்கள வேள்வியும்இ அறக்கள வேள்வியும் ஆற்றியவன். குறுங்கோழியார்இ இடைக்குன்றூர் கிழார்இ குடபுலவியனார்இ மாங்குடி கிழார் ஆகிய புலவர் பெருமக்களால் பாராட்டப்பட்டவன். இம்மன்னின் குணங்களால் கவரப்பட்ட நக்கீரர் (சிவனிடமே வாதிட்டவர்) அவனைப் புதிய கோலத்தில் பாட விரும்பி அவனதுஇ காதலையும்இ வீரத்தையும் இணைத்துப் பாடினார்.

காதலுக்கு எடுத்துக்காட்டாக அவனது மனைவி கோப்பெருந்தேவியையும்இ அதற்குத் துணையாக கூதிர் காலத்தையும்இ வீரத்திற்கு எடுத்துக்காட்டாக செழியனையும் அவனது போர்ப் பாசறையையும் காட்டினர். கூதிர் காலம் தொடங்கியது. செழியனுக்கு அது நல்வாடையாகவும்இ அவனது மனைவிக்கு அது நெடு வாடைக்காற்றாகவும் தோன்றியது. கூதிர் காலத்தின் சிறப்பை கண்ணில் நிறுத்தும் பாடல் வரிகள் இவருடையது. மன்னனைப் பிரிந்த அரசயின் துயரம் அளவிட முடியாததுஇ அதனையும் அழகாக விவரித்துள்ளார் நக்கீரர்.

### 10. மதுரைக்காஞ்சி

மதுரைக்காஞ்சியினைப் பாடிய புலவர் மாங்குடி மருதனார். பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன். இது 782 அடிகளைக் கெணர்டது. பத்துப்பாட்டினுள் அளவால் பெரியது மதுரைக்காஞ்சி. இதனை சிறு காப்பியம் என்றே கூறலாம். தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உலக நிலயாமையை எடுத்துக்கூறிஇ வீடு பேற்றின் சிறப்புக்களை செவியறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் இப்பாடலைப் பாடினார். பாண்டியனின் தலையாலங்கானத்து வெற்றிகள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. மதுரை வர்ணனையில் வையையாறுஇ மதில் அகழி முதலியவற்றின் சிறப்புஇ நாளங்காடிஇ அல்லங்காடி வருணனை ஆகியவை இடம் பெறுகின்றன. திருப்பரங்குன்ற விழா போன்ற விழாக்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன.